நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 9 திங்கள் இதழ்
தொகுதி: 113 விலை: ரூ.20
திருவள்ளுவர் ஆண்டு 2050 செப்டம்பர்- 2019

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் - பேராசிரியர் இரா. சதாசிவம் 4

2. சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா 6
- முதுமுனைவர் இரா. இளங்குமரனார்

3. மதுரைக் காஞ்சி மேலாய்வுக்களம் 9
- பேராசிரியர் இ.கி. இராமசாமி

4. தொடரியல் கோட்பாடு 12
- பேராசிரியர் செ.வை. சண்முகம்

5. உந்தும் – உத்தும் 29
- பேராசிரியர் இரா. கோதண்டராமன்

6. காப்பிய உவமைகள் – ஹோமர், மில்டன் சங்க சான்றோர் - பேராசிரியர். ப. மருதநாயகம் 34

7. சங்கச் செய்திகள் 41

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள்கட்டணம்	ரூ,3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

முன்பனிக்காலம் வந்தது; தலைவன் வரவில்லை. தலைவி தன் தவிப்பை அறிவரை நோக்கி வினவுகின்றாள் தலைவிக்குத் தலைவன் சொல்திறம்ப மாட்டான் என்ற உறுதி; அதனால் இது முன்பனிக்காலம் தானா? என்று ஒரு ஐயம். அதனால் காலத்தை அறிந்து சொல்லும் அறிவரைப் பார்த்து வினவுவதாக அமைந்தது இப்பாடல். காலங்கள் தோறும் மக்கள் வாழ்க்கை மரபுகள் மாறுகின்றன. அக்காலத்தில் துறவும் அறிவும் நிறைந்த சான்றோர் பலர் இருந்தனர். அவர்கள் தமக்கென முயலா இயல்பினர், சான்றோர், அறிவர் எனப்போற்றப்பட்டனர். அவர்களைப் பாதுகாத்து அவர்கள் நல்லாற்றின் நிற்கவும், மக்களுக்குப் பயன்படவும் இல்வாழ்வான் துணைநின்றான். அப்பெருமக்கள் பிச்சை புக்கு வாழ்ந்தாலும் சமுதாயத்தில் மதிப்பும் முதன்மையும் பெற்று விளங்கினர். அத்தகைய செய்தி ஒன்று குறுந்தொகையில் 277ஆம் பாடலில் கிடைக்கிறது. அப்பெருமக்கள் ஓரிற்பிச்சையார் என அழைக்கப்படுகின்றனர். இது ஒரு பழைய சமுதாய வரலாற்றின் எச்சம். சொற்றொடரின் அருமை கருதிய நூலாய்ந்த புலவர்கள் அப்பாடல் ஆசிரியரை ஓரிற்பிச்சையார் எனப் போற்றினர். பேராசிரியர் இளங்குமரனார் அப்பாடலை விளக்கிப்பாட பேதங்களையும் சுட்டி மேலும் சிந்திக்க வைக்கிறார். உ.வே.சா. மற்றும் பூண்டியப்பப் புலவர் போன்றவர்கள் பாடற்குறிப்பும் நோக்கத்தக்கது.

"தொடரியல் கோட்பாடு" என்னும் தலைப்பில் பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் எழுதிய கட்டுரையின் பின்பகுதி இடம்பெறுகிறது. இப்பகுதியில் தொல்காப்பிய இலக்கணம் மொழிகட்டமைப்பு பெருண்மையியல் நோக்கில் தம் சிந்தனையைச் செலுத்தியுள்ளது என்பதை மொழியியல் விளக்கத்துடன் பேராசிரியர் எடுத்துக்காட்டும் செய்தி தொல்காப்பியத்தின் நுண்பொருள் ஆயும் அறிஞர்கள் உளம் கொள்ளத்தக்கது.

"அவைதாம்
முன்னப்பொருள புணர்ச்சி வாயின்
இன்னஎன்னும் எழுத்துக்கடன் இலவே"

என்ற நூற்பா ஆசிரியர் மாணவர் கற்றுப்பயன் பெறுதற்குரியது. தொல்காப்பியர் தொடரிசை மாறுபாட்டை எடுத்துரைத்து தொடரியலாரின் தொடரமைப்பைப் புரிய வைக்கும் முயற்சி இன்புறத்தக்கது.

பேராசிரியர் செ.வை.சண்முகம் சொல்லதிகாரத்தில் கருத்தாடல் (Discourse) உத்தி அமைந்திருப்பதையும் தெளிவுபடுத்துகிறார். இக்கட்டுரை தொடரியல் கோட்பாடு குறித்த பல்வேறு நிறைந்த நுட்பமான செய்திகளை உள்ளடக்கியுள்ளது. தேர்ந்து தெளிந்து கற்று இன்புறுக.

பேராசிரியர் இரா.கோதண்டராமன் மொழியியல் வரலாற்று அறிஞர். திராவிட மொழி சார்ந்த இலக்கணப்புலமை வல்லவர். இப்பேரறிஞர் "**உந்தும் உத்தும்**" குறித்த அடிப்படைகளை வரலாற்று நோக்கில் எடுத்துரைக்கிறார். தொல்காப்பியர்,உரையாசிரியர்கள், தமிழ் மொழி வரலாறு எழுதிய பெரும் பேராசிரியர் தெ.பொ.மீ. ஆகியோர் சிந்தனைகளை எடுத்துரைத்து அவற்றில் காணும் வன்மை மென்மைகளையும் தவறாது சுட்டிச் செல்வது கற்போர் கருத்தில் கொள்ளத்தக்கது. ணகர, நகரங்கள் தொல் திராவிடத்தில் ஒரே ஒலியனாக நிகழ்ந்தன என்னும் தெ.பொ.மீ. கூற்றை மறுத்து பேராசிரியர் இரா.கோதண்டராமன் தம் கட்டுரையைத் தொடர்ந்திருப்பது தெ.பொ.மீ.யின் மொழி வரலாற்று நூலின் அருமையை நமக்கு அறிவுறுத்துவதாகும். மாணவர், ஆசிரியர்கள் அந்நூலைப் படிப்பதன் அவசியத்தை உணர்த்துகிறது.

உந்தும், உத்தும் குறித்த ஆசிரியர் கட்டுரை மாணவர்களும், ஆசிரியர்களும் இனிது அமர்ந்து படித்துப்பயன் பெறத்தக்கது.

பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்கள் மேலை நாட்டு இலக்கியம், தமிழ் இலக்கியம் ஆகியவற்றை அரிதின் முயன்று கற்று கல்வி உலகம் நன்கறிந்த பேராசிரியராக விளங்குபவர். அப்பெரியார் கோமரின் கிரேக்க இலக்கியம், மில்டன் எழுதிய "இழந்த சொர்க்கம்" ஆகிய காப்பியங்களை நன்கு கற்றுத் துறை போகிய பேரறிஞர். மாணவப்பருவத்திலேயே அவற்றைக் கற்று ஆய்வு செய்த கல்வியாளர்.

அவர்கள் "உவமை" தமிழ் இலக்கண இலக்கியங்களில் செவ்விதின் பயன்படுத்தப்பட்டிருப்பது இலக்கிய வாசிப்பிற்கு மையப்புள்ளியாக அமைந்து இலக்கிய இன்பம் தருவதை எடுத்துரைக்கும் செய்தி அறியத் தக்கது. வடமொழியாளர் விதந்து போற்றும் தொனிக் கோட்பாடு தமிழ் இறைச்சி, உள்ளுறை ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டதே என்னும் உண்மையை மேலைநாட்டு ஆய்வு அறிஞர்கள் எடுத்துக்காட்டுவது ஈண்டு அறியத்தக்கது. இறைச்சி உள்ளுறை குறித்த விரிந்த செய்திகளை இக்கட்டுரையில் காணலாம். மாணவர் ஆசிரியர்கள் கட்டுரையைப் பலமுறை படித்துப் பயன் பெற இக்கட்டுரையில் பல நுட்பமான செய்திகள் உள்ளன. படிக்க.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர். **இரா. இளங்குமரனார்**

ஓரிற் பிச்சையார்

வீட்டில் உள்ளதில் பிரித்து வழங்கும் சோறு, குழம்பு,கறி பிச்சையாம். பிரித்து> பிய்த்து> பிச்சு> பிச்சை.

தார்-நீளம்; பன்னூறு பழங்களைக் கொண்டது வாழைத்தார்;

அதில் எத்தனைப் பழம் வேண்டுமோ அத்தனைப் பழங்களைப் 'பிச்சுக்' கொடுப்பது இன்று வழக்குச் சொல்லே.

'**ஐயமும் பிச்சையும்**" என இரண்டாக ஆண்டாளார் கூறுவதால் அவர்காலத்தில் இரந்துண்பாரையும் இருவகையாகப் பிரித்தமை புலப்படும். பசியால் இரந்துண்ண வருவார்க்கு இடுவது 'ஐயம்' என்றும், வளமிகக் கொண்டாரும் நோன்பு- கொள்கை- என்று இரந்து கொள்ள வருவாராயின் அவர்க்கு இடுவது 'பிச்சை' என்றும் ஆயின.

புத்தர் பிச்சைக் கலம் ஏந்தினார்; பட்டினத்தார் அக்கலமும் ஏந்தாமல் இரந்தும் செல்லாமல் கொண்டு வந்து கொடுப்பாரிடம் கையே பிச்சைக் கலமாகக் கொண்டு உண்டார்; விவேகானந்தர் தம் தொண்டரைப் பிச்சைக்கு ஏவியதுடன் தாமும் பிச்சையெடுத்து உண்ணவும்

செய்தார்.

இறையின் பெயரே பிச்சை, பிச்சையாண்டி, பிச்சைப்பெருமான் எனப்படுதலும் அப்பெயருடையார் உள்ளமையும் கண்கூடு.

பொருள்: தோழி, தலைவன் பிரிந்து செல்லும் போது கூதிர்க் காலத்து (வாடைக் குளிர் காலத்து) மீள்வேன் என்று சொல்லிச் சென்றான்; ஆதலால், அக்காலம் எது என அறிவரைக் கேட்டாள். அவ்வாறு அறிவர் சொன்னால் 'அவர்க்குக் குற்றமற்றதும் நாய் இல்லாததும் ஆகிய அகன்ற பெரிய நல்ல மனையில், செந்நெற் சோறும் செழுமையான நெய்யும் கிடைக்கப்பெற்று அவ்வொரு மனைச் சோறே சாலுமென உண்ண உண்ணவும், குளிர்காலத்திற்கு ஏற்றவாறு வெப்பக்கலத்தில் வைக்கப்பட்ட நீரும் பெறுவீர் என்றும் கூறிய இப்பாடலில்,

'ஓரிற் பிச்சை ஆர மாந்தி'

எனவரும் தொடரால் சான்றோர் பெயர் சூட்டப்பட்டதாம்.

ஆசில் தெருவில் ஆசில் வியன்கடைச்
செந்நெல் அமலை வெண்மை வெள்ளிழுது
ஓரிற் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்

சேமச் செப்பில் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவ தென்றி
அக்கால் வருவரெம் காத லோரே. (குறு. 277)

(ஆசில் வியன்கடை என்பது சங்க இலக்கியப் பாடம். நாயில் வியன் கடை என்பது உ.வே.சா உரைப் பதிப்பு. தண்ணீர் என்பது தெண்ணீர் எனப் பாடம் கொண்டதும், என்றி என்பது என்றிர் என்பதும் **பூண்டியப்பப் புலவர்** ஏட்டுப் பாடம்).

(தலைமகன் பிரிந்தவழி அவன் குறித்த பருவ வரவு (கருதிய) தோழி அறிவரைக் கண்டு வினாவியது என்பது கூற்றுவகை).

பொறையுடைமை

அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து - பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்தல் அரிது

அறிய வேண்டியதைத் தெளிவாக அறிந்து, பொறுமையைச் சிக்கெனக் கடைப்பிடித்து, அஞ்ச வேண்டியதற்கு அஞ்சி, செய்யத்தக்க செயலை உலகோர் விரும்புமாறு செய்து, அதனால் பெறும் பயனால் மகிழ்ந்து வாழும் இயல்புடைய பெருமக்கள் எக்காலத்திலாயினும் துன்பத்துடன் உயிர் வாழ்வது இல்லை.

மதுரைக்காஞ்சி - மேலாய்வுக்களம்

பேரா.முனைவர் இ.கி.இராமசாமி,
தமிழ்த்துறை மேனாள் தலைவர்,
தமிழ் உயராய்வு மையம், யாதவர் ஆடவர் கல்லூரி,
மதுரை - 17.
கைபேசி: 9842008954

சென்ற இதழின் தொடர்ச்சி .. ..

காஞ்சியா? பொருண்மொழிக் காஞ்சியா?

மதுரைக்காஞ்சியைத் துல்லியமாகக் காஞ்சித் திணைக்குப் பொருத்திக்காட்டிய சாமிநாதையர், காஞ்சித் திணையில் அமைந்த புறநானூற்றின் 24-ஆம் செய்யுளுக்குப் புறப்பொருள் வெண்பாமாலை கூறிய **பொருண்மொழிக் காஞ்சியைத்** துறையாகக் கொள்ளுகின்றார். காஞ்சி என்பதற்கும் பொருண்மொழிக்காஞ்சி என்பதற்குமுள்ள நுட்பமான வேறுபாட்டை வேறுவேறு இடங்களில் விளக்கிக் காட்டியுள்ளார். "இது நிலையாமை கூறி, இனிது ஒழுகென்றமையால் பொருண்மொழிக் காஞ்சி" (புறநானூறு மூலமும் உரையும், ப.66) என்பது அவருடைய விளக்கம். மதுரைக் காஞ்சி என்ற தொடருக்கு "மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சி என விரிப்பர். காஞ்சித்திணை என்பது வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் கூறும் குறிப்பினது (ப.xviii)" என்று விளக்கம் எழுதுகின்றார். மதுரைக்காஞ்சிக்கு எழுதிய விளக்கத்தில் நிலையாமை, வீடுபேறு ஆகியன இடம்பெறுகின்றன.

புறநானூற்றுப் பொருண்மொழிக் காஞ்சித்துறைக்கு எழுதிய விளக்கத்தில் நிலையாமை, ஒழுகலாறு ஆகியன இடம் பெறுகின்றன. காஞ்சியில் வீடுபேறும் பொருண்மொழிக் காஞ்சியில் ஒழுகலாறும் நுட்பமான வேறுபாடுகளாகத் தோன்றுகின்றன. காஞ்சித்திணையின் உட்பிரிவாகிய துறைதான் பொருண்மொழிக் காஞ்சி, திணைக்கும் துறைக்கும் நிலையாமைதான் அடிக்கருத்து.

முடிபுகள்:

1. மாங்குடிமருதனாரும் மாங்குடிகிழாரும் ஒருவரே என்று ஆனபடியால் மாங்குடிமருதனார் என்ற பெயரை மட்டும் கொண்டு செய்யுட்களை அச்சிடலாம்.

2. பல்சாலை என்பதற்குப் பலசாலைகளை அறச்சாலை, மரச்சாலை, காந்தளூர்ச்சாலை போன்ற நெடுஞ்சாலை என்று பொருள் கொள்வதே பொருத்தம். பல்யாக சாலை என்று வலிந்து பொருள் கொள்ள இடமில்லை.

3. **நல்வேள்வி** என்பதை விடப் **பல்கேள்வி** என்று பாடங் கொள்ளுவதே பொருத்தமாகும்.

4. நிலந்தரு திருவின் நெடியோன் என்பதற்குத் திருமால் என்று பொருள் கொள்ளுவதைவிட, இழந்த மண்ணுக்கு ஈடான நிலத்தைத் தம் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த, பாண்டியன் நெடுஞ்செழியன் என்று எடுத்துக்கொள்ளுவதே நேர் பொருளாகும்.

5.பதிப்பாசிரியர் தமது சமயச்சார்பை விடுத்து நடுநிலைமையோடு பொருள் எழுதுவதே ஆய்வு அறமாகும்.

இக்கால ஆய்வாளர்கள் இந்த ஆய்வறத்தைக் கடைபிடிப்பதே தமிழ் வளர்ச்சிக்கு உரமாகும்.

6.காஞ்சிக்கும் அதன் துறையாகிய பொருண்மொழிக்காஞ்சிக்கும் பெரிய வேறுபாடு தோன்றவில்லை. தொல்காப்பியர் வகுத்துக்காட்டிய ஏழு புறத்திணைகளை (வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்) மனங்கொண்டு அவற்றைச் செவ்வியல் இலக்கியங்களுக்கு வகுத்துக் காட்டிவிட முடியும். புறப்பொருள் வெண்பாமாலையை வைத்துத் திணை துறை வகுக்கத் தேவையில்லை.

பார்வை நூல்கள்:

1. புறநானூறு (மூலமும் உரையும்), உ.வே.சாமிநாதையர் (பதி.ஆ.),அவர் நூதனமாக எழுதிய பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன், தியாகராச விலாச வெளியீடு, சென்னை. 1963, ஆறாம் பதிப்பு
2. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், உ.வே.சாமிநாதையர் (பதி.ஆ.),தமிழ்ப்பல்லைக்கழகம், தஞ்சாவூர், 1985.
3. சங்கத்தமிழ், தெ.பொ.மீ.களஞ்சியம், காவ்யா பதிப்பகம், சென்னை, 2007.

தொடரியல் கோட்பாடு

பேராசிரியர் **செ. வை. சண்முகம்,**
மொழியியற்புலம் (ப. நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.
கைபேசி : 9865196476

சென்ற இதழின் தொடர்ச்சி .. ..

அடை

உள்வட்டத் தொடரில் இலக்கண உறவைப் பொறுத்த வரையில் அடை என்ற கருத்தமைவைத் தொல்காப்பியம் புணரியலிலேயே குறிப்பிட்டுள்ளது.

'நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய' (8)

உரையாசிரியர்கள் பதினாயிரத்து ஒன்று, ஆயிரத் தொருபது என்ற உதாரணங்களைக் கொடுத்துள்ளார்கள். பதினாயிரம் + ஒன்று ...> பதினாயிரத்து ஒன்று. ஆயிரம் + ஒரு பது .. .. > ஆயிரத் தொருபது. இங்கு முன்னதில் ஆயிரம் என்பதே தலைச்சொல், பதின் என்பது அடைச்சொல், பின்னதில் பத்து தலைச்சொல், ஒரு (ஒன்று) அடைச்சொல்).

அதாவது ஆயிரம் + ஒன்று .. .. > ஆயிரத்தொன்று என்பதுபோல ஆயிரம், பதின் என்ற அடையைப் பெற்றபோதும் புணர்ச்சி மாற்றம் பெறுகிறது என்பதால் புணர்ச்சி மாற்றத்தில் நிலைமொழியின் தலைச்சொல்லே முக்கியமானது. அதுபோல் வருமொழியில் அடையே முக்கியத்துவம் பெறுகிறது.

பெருமரக்கிளை,

மரச் சிறுகிளை

அதாவது புணர்ச்சி மாற்றத்துக்கு இலக்கண உறவோடு நிலைமொழி வருமொழி என்ற தொடர் உறவும் முக்கியமானது என்ற உண்மை புலப்படுத்தப்படுகிறது.

மேலும் தொல்காப்பியம் இலக்கண உறவில் ஓரளவு பொருண்மையியல் நோக்கில் 'அடை' என்று கூறியதன் மூலம் இன்று தொடரியலில் பேசப்படும் தலை (head), அடை (attribute or adjective/ adverb) என்ற கருதுகோளும் உணர்ந்திருந்தது என்பதைப் புலப்படுத்துகிறது.

பொருள் மயக்கத் தொடர்

பொருள் மயக்கத் தொடர் மொழியில் அமைந்திருப்பதை உணர்ந்து அவை தொடரிசை மாறுபாடுவதைத் (change of intonational pattern) தொல்காப்பியம் புணரியலின் இறுதியில் (39,40) குறிப்பிட்டுள்ளது.

எழுத்தோ ரன்ன பொருள்திரி புணர்ச்சி

இசையில் திரிதல் நிலைஇய பண்பே(39).

அவைதாம்

முன்னப் பொருள புணர்ச்சி வாயின்

இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே (40).

சில தொடர்கள் எழுத்தமைப்பு ஒன்றாக அமைந்திருந்தாலும், அவைகளின் பொருள் மாறுபாடு தொடரிசை மாறுபாட்டால் (இசையில் திரிதல்) புலனாகும். உண்மையில் தொடரின் சொல்லியல் அமைப்பும் மாறுபடுகின்றது.

செம்பொன்பதின்தொடி,

குன்றேறாமா

என்பவை உரையாசிரியர் உதாரணங்கள்

செம்பொன்பதின்தொடி < செம்பு + ஒன்பதின் தொடி செம்பொன் + பதின் தொடி என்று இரண்டு பொருள் படுகிறது. அதற்குக் காரணம் 'முன்னப்பொருள்'. அதாவது பேசுவோர் கருத்து அதாவது அவர் எதைத் தலைச்சொல்லாகக் கருதுகிறார் என்பதைப் பொறுத்தது.

நச்சினார்க்கினியர், செம்பொன்பதின்தொடி என்றுழிப் பொன் ஆராய்ச்சி உள்வழி பொன் எனவும் (செம்பொன் + பதின் தொடி) எனவும் செம்பு ஆராய்ச்சி உள்வழி செம்பு (செம்பு + ஒன்பதின் தொடி) எனவும் உணரப்பட்டது என்று விளக்கியுள்ளார்.

பேசுவோர் எதைத் தலைச் சொல்லாகக் கொள்கிறார் என்பதை ஒட்டி தொடர் பகுப்பு தொடரியல் அமைப்பு அமையும்.

பொருள் மயக்கத் தொடர்கள் சொல்லும் தொடரியல் அமைப்பும் மாறுபடுவதால் மொழியியலார் பொருள் மாறுபடுகிறது என்று கொள்ளத், தொல்காப்பியம் எழுத்து நோக்கில் தொடரியல் அமைப்பு மாறுபட்டு பொருள் மாறுபடுவதைக் குறிப்பிட்டதும் சிறப்பானதே. உண்மையில் எல்லாப் பொருள் மயக்கத் தொடர்களிலும் தொடரின் சொல்லமைப்பும், ஒலி (தொடரிசை மாற்றம்) ஆகிய இரண்டும் கலந்துள்ளது.

பழைய மாணவர் விடுதி என்பது பழைய மாணவர் + விடுதி என்னும் போது பழைய மாணவர் என்பது கருத்து அழுத்தம் பெறுவதோடு மாணவர் ஒலி அழுத்தம் பெறும்.

பழைய + மாணவர் விடுதி என்னும் போது பழைய என்பது ஒலி அழுத்தம் பெறும். தொடரியலார் **தொடரமைப்பில்** கருத்துச் செலுத்த தொல்காப்பியம் புணரியலில் கூறியதால் **தொடரிசை** மாறுபாடு மட்டும் குறிப்பிட்டுள்ளது.

சொல்லதிகாரம்

சொல் என்பது வார்த்தை (word) என்ற பொருள் உடையதானாலும் சொல்லதிகாரத்தில் தொடரியல் கருத்துகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. அதனால் 'சொல் என்பது தனி மொழியும் தொடர்மொழியும் குறிக்கும் என்றும், இருமொழித் தொடரும் பன்மொழித் தொடரும் எனத் தொடர் மொழி இருவகைப்படும் என்றும் சேனாவரையரும்; சொல் அதிகாரத்தாற் பயன் தொடர் மொழியாகிய வாக்கியத்தினைப் பிரித்துப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனக் குறிப்பிட வேண்டுமென்று தெய்வச்சிலையாரும் விளக்கியுள்ளது அறியத்'தகுந்தது.

தொடரியல் கருத்துகள் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எச்சவியல் ஆகிய இயல்களில் அதிகமாகவும், ஏனைய இயல்களில் குறைவாகவும் அமைந்துள்ளன. விளக்கமுறை கருத்துக்களும் மாற்றிலக்கணக் கருத்துகளும் காணப்படுவதும் குறிப்பிடத்தகுந்தது. **தொடரியலோடு கருத்தாடல்** (discourse) சொல்லதிகாரத்தில் அமைந்துள்ளதும் அறியத் தகுந்தது.

கிளவியாக்கம் :

முதல் இயலாகக் கிளவியாக்கம் என்று அமைத்து, அது தொடரியலோடு மட்டும் அல்லாமல் ஒன்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட வாக்கியங்கள் அடங்கிய கருத்தாடலியல் கருத்தும் விளக்கியுள்ளது குறிப்பிடத் தகுந்தது. உதாரணமாகச் சுட்டுப்பெயர்த் தொடரை விளக்கும்போது இயற்பெயர்க் கிளவி முதலிலும் சுட்டுப்பெயர்க் கிளவி அடுத்தும் வரும் என்பது இரண்டு

வாக்கியங்களின் வரிசை முறை பற்றியது (கிளவி. 38) கொற்றன் வந்தான், அவற்கு சோறு கொடுக்க என்பது இளம்பூரணர் உதாரணம்.

'கிளவி என்பது தனி மொழியும் தொடர் மொழியும் கொள்ளப்படும்' என்று இளம்பூரணரும், சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து பொருள் மேலாகும் நிலைமையைக் கிளவியாக்கம் என்று தெய்வச்சிலையாரும் விளக்கியிருப்பது தொடரியல் கருத்து அடங்கியுள்ளது என்பது தெளிவு.

கிளவியாக்கத்தில் தொடரியல் கருத்துகள் :

1. எழுவாய்/ பயனிலை, திணை/பால் இயைபு

தமிழ் வாக்கியத்தின் ஒரு சிறப்பு எழுவாய்ப் பெயரின் இடம் திணை பாலும் பயனிலை வினைமுற்றின் இடம் திணைபால் விகுதியும் ஒத்து அமைய வேண்டும். அதாவது வாக்கியத்தில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் திணைபால் இயைபு(gender / number concordance) என்பது ஒரு தொடரியல் விதி.

அதை

"வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே" (கிளவி.11)

நான் வந்தேன்/ நீ வந்தாய் / அவன் வந்தான் / அவள் வந்தாள் / அவர் வந்தார் / அது வந்தது / அவை வந்தன.

கருத்தாடல் நோக்கில் பல திணைச் சொற்கள் விரவி வருதல் பற்றியும் அவை ஏற்கும் பயனிலைப் பற்றியும் பல சூத்திரங்களில் விளக்கப்பட்டுள்ளன.

2) தொடர் அமைப்பு

வண்ணச் சினைச் சொல்

செங்கால் நாரை போன்ற தொடர்களை வண்ணச் சினைச் சொல் (கிளவி. 26) என்று பெயரிட்டதன் மூலம் வண்ணம் + சினை + சொல் (பெயர்)

தேர்வுக் கட்டுப்பாடு

தொடரியல் நோக்கில் பெயர் + பெயர், பெயர் + வினை என்ற தொடர் அமைப்பு இருப்பது உண்மையானாலும், மொழிப்பயன்பாட்டில் தொடர் அமைப்பில் சில கட்டுப்பாடு உண்டு. இளமைப் பெயரைப் பொறுத்த வரையில் ஆட்டுக்குட்டி, கோழிக்குஞ்சு, மாட்டுக்கன்று என்று கட்டுப்பாடு தேர்வு அமைந்துள்ளது; தேர்வுக் கட்டுப்பாடு (selectional restrictions) விதி அமைந்துள்ளது. மனிதன் பறப்பான், குரங்கு பாடும் என்ற வினைச்சொல் தேர்விலும் உண்டு.

அந்தமுறையில் செல், வா, தா, கொடு ஆகிய வினைச் சொற்களோடு வரும் இடச்சொற்களின் (தன்மை, முன்னிலை, படர்க்கை) கட்டுப்பாட்டை மூன்று சூத்திரங்கள் (28-30) விளக்கியுள்ளன. தா, வா ஆகிய இரண்டு வினையும் தன்மை, முன்னிலை இடமும் செல், கொல் ஆகிய படர்க்கை இடமும் பெறும். எனக்குத் தந்தான், உனக்குத் தந்தான், அவனுக்குக் கொடுத்தான். இன்றைய கட்டுப்பாடு மாறிவிட்டது. அது மொழி மாற்றத்தின் விளைவு.

வேற்றுமையியல்

இதில் ஒவ்வொரு வேற்றுமையும் ஏற்று வரும் சொற்கள் விளக்கப்பட்டுள்ளதால் வேற்றுமைத் தொடர்கள் என்ற முறையில் தொடரியல் கருத்துக்கள் அமைந்துள்ளன. அந்த விளக்கத்தில் 1.வேற்றுமை, கொண்டு முடியும்

சொற்களும்((பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல்... (5), 'காப்பின் ஒப்பின்'... (11), 'வண்ணம், வடிவு'... (17)), இயற்கையின், உடைமையின்...(19) ii கொண்டு முடியும் தொடர் அமைப்பும் (அதனின் இயறல் (13), அதற்கு வினை உடைமையின்(15)); iii. வாக்கிய அமைப்பும் ('இதனின் இற்று இது' என்பது ஐந்தாம் வேற்றுமையின் தொடரியல் அமைப்பு (16)) அமைந்துள்ளன.

முதல் வேற்றுமையை விளக்கும் போது (5) கொண்டு முடியும் சொற்களின் பட்டியலில் பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினைநிலை உரைத்தல், வினாவிற்கு ஏற்றல் என்பவை வினைச் சொற்கள் பயனிலையாய் வருவன, பெயர் கொள வருதல் என்பது பெயரே பயனிலையாக வருவது என்பதால் தமிழில் பெயர் + வினை, பெயர் + பெயர் என்ற இரண்டு வகை வாக்கியங்கள் அமைந்திருப்பது, குறிப்பிடப்பட்டிருப்பது தொடரியல் நோக்கில் முக்கியமானது.

கொற்றன் இருக்கிறான்/ வாழ்க/ வந்தான், யார் என்பவை பெயர்+ கொற்றன் ஒரு வீரன் என்பது பெயர் + பெயர் வாக்கியம். வினை வாக்கியங்கள். (மலையாளத்திலும் என்ற வினையும் ஆங்கிலத்திலும் பெயர் வினை வாக்கியங்களே அமைந்துள்ளன. மலையாளத்தில் ஆனு என்ற வினையும் ஆங்கிலத்தில் ஈஸ் (is) என்ற வினையும் இணைக்கப்படும்[1].

வேற்றுமை மயங்கியல்

வேற்றுமை மயங்கியலில்

1.வேற்றுமை உருபுகள் மயங்கி வருதல் அதாவது, இரண்டு உருபுகள் உறழ்ச்சியாக வருதல் (வழியைக் கடந்தான் வழிக்கண் கடந்தான் (3)

2. வேற்றுமையின் குறிப்பிட்ட பொருளில் வரும் முறை ஒடு என்பது உயர்பொருளோடு வரும். நாயொடு வந்தான் என்றால் நாயை அவன் மதிக்கின்றான் என்று பொருள். (8)

3. பொருள் மயக்கம் உடைய தொடர்களைத் 'தடுமாறு தொழில் பெயர்' என்று குறிப்பிட்டு அதில் உருபு மயக்கம் (12) புலிகொல் யானை, புலியைக் கொல்லும் யானை, புலியால் கொல்லப்பட்ட யானை.

4) ஒரு வேற்றுமை உருபே ஒரு வாக்கியத்தில் தொடர்ந்து அமைந்தால் ஒரு வினைச் சொல்லையே ஏற்கும் (19)

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்(குறள்.543)

5) சில குறிப்பிட்ட தொடர்களில் வேற்றுமை உருபு அமையும் முறை, முதல் சினைப் பெயர்களில் முதல் பெயரில் ஆறாம் வேற்றுமையும் சினைப் பெயரில் ஏழாம் வேற்றுமையும் வரும் (4) யானைக் கோடு, யானையது கோட்டைக் குறைத்தான்.

6) வேற்றுமை ஏற்ற தொடர் வாக்கியத்தின் இறுதியிலும் வரலாம்(20). 'கண்டனன் கற்பினுக்கு அணியைக் கமலக் கண்களால்' (கம்பர்). அது மொழி அமைப்பு தொடரியல் நிலையிலும் உறழ்ச்சி உடையது என்பதை உணர்த்துவதோடு அது பேசுவோர் உணர்வை உறுத்தும், இது கருத்தாடல் நோக்கு. இது அனுமன் இராமனிடம் சீதையைக் கண்டதைக் கூறுவது, அதாவது இராமன் மனநிலையை உணர்ந்து கூறியது விருப்ப மொழி மாற்று.

7) வினையின் தொடர் ஆற்றல் (29)

பொதுவாக வினைகளைத் தொடரியல் நோக்கில் செயப்படுபொருள் குன்றிய வினை (நட, வா, போ முதலியன) செயப்படுபொருள் குன்றா வினை (பார், படி, எழுது முதலியன) என்று பிரிப்பது உலகளாவிய வழக்கம். அது

வேற்றுமை என்ற இலக்கணக் கூறில் செயப்படுபொருளை அடிப்படையாகக் கொண்டது.

தொல்காப்பியம் ஒரு வினைச்சொல் தொடரியல் நோக்கில் அதிக அளவு ஏற்கும் இலக்கணக் கூறுகளைத் தொகுத்துக் கொடுத்துள்ளது. தொழில், செய்வது (கருத்தா, எழுவாய்), செயப்படுபொருள், நிலம், காலம் (ஏழாம் வேற்றுமை) கருவி (மூன்றாம் வேற்றுமை), இன்னதற்கு (நாலாம் வேற்றுமை பொருட்டு) இதுபயன் (நாலாம் வேற்றுமை) ஆகிய எட்டுக்கூறுகள் அமையும். உண்மையில் கேட்போர் புரிதலை நோக்கியது.

'வனைந்தான் என்ற வழி வனைதற் தொழிலும், வனைந்த கருத்தாவும் வனையப்பட்ட குடமும், வனைதற்கு இடமாகிய நிலமும், அத்தொழில் நிகழும் காலமும், அதற்குக் கருவியாகிய திகிரி முதலாயினவும், வனையப்பட்ட குடத்தைக் கொள்வானும், வனைந்ததனாய பயனும் ஆகிய எட்டும் பற்றி அத்தொழில் நிகழ்ந்தவாறு கண்டுகொள்க' என்பது சேனாவரையர் விளக்கம். அது கருத்தாடல் நோக்கில் கேட்போர் உணர் முறை. ஆனால் இங்கு தொடரியல் நோக்கே முக்கியமானது. அதனால் தொழிலும் செயப்படுபொருளும் இரண்டாவது ஆயின; கருவியும் கருத்தாவும் மூன்றாவது ஆயின; கொள்வதும் பயனும் நான்காவது ஆயின; இடமும் காலமும் ஏழாவது ஆயின; இவற்றுள், கருத்தா முதல் வேற்றுமையும் ஆம்' என்று தெய்வச்சிலையார் விளக்கியுள்ளார்.

இங்கு செயப்படுபொருள் குன்றிய வினைகள் இருப்பதைப் போலவே மூன்றாம், நாலாம் வேற்றுமைகள் ஏற்காத வினைகள் உண்டு என்ற உண்மையும் அறியத் தகுந்தது. நட, ஓடு, படி, உண், அழு, வாங்கு முதலிய வினைகளுக்குக் கருவி அமைவது இல்லை. மாறாக, ஒடி,

வெட்டு, அரி முதலிய வினைகளுக்குக் கருவி கட்டாயம். அதுபோலக் கொடு, தா, வாங்கு முதலிய வினைகள் நாலாம் வேற்றுமை ஏற்று வரும், உள்ளடங்கியது.

கண்ணன் முருகனுக்குப் புத்தகம் கொடுத்தான்.

கண்ணன் புத்தகம் கொடுத்தான் என்றாலும் யாரோ ஒருவருக்குக் கொடுத்தான் என்று வாசகர் உணர்ந்துகொள்வார்.

வேற்றுமை மயங்கியலில்தான் (31-4) ஆகுபெயர் விளக்கப்பட்டுள்ளது. அது உண்மையில் கருத்தாடல் நோக்கில் சொற்பொருண்மையியல் சார்ந்தது.

அதுபோல பெயரியலில் விளக்கியுள்ள இறைச்சி கருத்தாடல் நோக்கு பொருண்மையியல் சார்ந்தது.

வினையியல்

தமிழில் வினைகள் தெரிலை வினை, குறிப்பு வினை என்று இரண்டாகப் பகுக்கப்படுகிறது. அவை சொல்லியல் நோக்கு.

வினையைப் போல கால உருபன்களை ஏற்காவிட்டாலும் எச்ச விகுதி (பெரிய= பெயரெச்சம், பெரிது (மகிழ்)) திணை, பால், விகுதி (பெரியோன், பெரியை, பெரியன் பெரியள், பெரிது முதலியன) ஏற்று வரும். தொல்காப்பியம் நேரடியாகக் குறிப்பிடாவிட்டாலும் காலங் கொள்வன என்ற முறையில் தெரிநிலை வினைப் பாகுபாடு அடங்கியுள்ளது. 'குறிப்பினும் வினையினும்' (4.1) என்பதில் வினை தெரிநிலை வினையே.

சொல்லும் வாக்கியமும்

குறிப்பு வினை (கச்சினன் (இக்காலத் தமிழ், ஆடையான்) சொல்லியல் நிலையில் ஒரு சொல்லே.

குறிப்பு வினை அடியாகப் பெயர்களும் அவைகளோடு வரும் திணை-பால் உருபன்களும் ஆறாம், ஏழாம், ஒப்புப் பொருளில் இரண்டாம் வேற்றுமை உறவு உடையது என்று விளக்குவதால் வாக்கியமாக விரிக்கலாம் என்ற கருத்து புதைந்துள்ளது.

அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானும் என்று
அப்பாற் காலங் குறிப்பொடு கொள்ளும் (வினையியல் 15)
அன்மையின் இன்மையின் உண்மையின் வண்மையின்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியும் குறிப்பே காலம் (வினையியல்16,17)

அதற்கு ஏற்ப உரையாசிரியர்களும் கச்சினன், மாடத்தன் போன்ற உதாரணங்களைக் குறிப்பு வினைக்கு உதாரணமாகக் கொடுத்துள்ளார்கள். கச்சினன் < கச்சை உடையவன். (ஆறாம் வேற்றுமை) மாடத்தன் < மாடத்தில் உள்ளவன் (ஏழாம் வேற்றுமை) என்பதால் தொடர் குறிப்பு வினையாக மாற்றம் பெற்றுள்ளது. புணர்ச்சியில் எழுத்து கெடுதல் போல் (மர வேர்<மரம்+வேர்) சொல் கெடுதலும் தொடரியல் நோக்கில் அமைகிறது.

வினையெச்சம் அடுக்கி வரும் என்று கூறியது (36) தமிழில் கலவை வாக்கியம் அமைந்துள்ளது என்று விளக்குவதாகக் கொள்ளலாம். உண்டு தின்று, ஓடி, பாடி வந்தான் என்பது உரையாசிரியர்கள் தரும் உதாரணம். ஒன்றுக்கு மேற்பட்ட வினைகள் எச்சமாக ஒரு வாக்கியத்தில் அமையலாம் என்ற கருத்து பெறப்படுகிறது.

தமிழில் வினைச் சொல்லியலில் எச்சம் என்ற வகை உண்டு. தொல்காப்பியம் வினையெஞ்சு கிளவி (31,39), பெயரெஞ்சு கிளவி (39) என்று குறிப்பிட்டதோடு அவை கொண்டு முடிவன பற்றிக் கூறுவதால் (35,37) எச்சத் தொடர் என்ற தொடரியல் கருத்து பெறப்படுகிறது.

பொருள் மயக்க வாக்கியம்

பொருண்மை மயக்கத் தொடர் ஒன்றும் வினையியலில் விளக்கப்பட்டுள்ளது.

இது செயல் வேண்டும் என்னும் கிளவி
இரு வயின் நிலையும் பொருட்டா கும்மே
தன்பாலானும் பிறன்பா லானும் (46)

இதற்கு உரையாசிரியர்கள் சாத்தன் ஓதல் வேண்டும் என்று உதாரணத்தைக் கொடுத்து ஓதல் தொழிலைச் சாத்தனே வேண்டும் என்றும் சாத்தன் ஓதலைத் தந்தை வேண்டும் என்று விளக்கியுள்ளார்கள். முன்னது வேண்டும் என்பது துணை வினையாகவும் பின்னது தனி வினையாக இன்னொரு கருத்தா பெற்றுள்ளது.

தொடரியல் நோக்கில் 'ஓதல்வேண்டும்' என்பது ஒரு சொல் நீர்மைத்தாகவும் இரண்டு தனி வினையாக அமையும்போது இரண்டு கருத்தாக்கள் கொண்டதாக அமையும்.

மொழிமாற்று வாக்கியங்கள்

செயப்படுபொருளைச் செய்தது போலத்
தொழில்பட கிளத்தலும் வழக்கியல் மரபே (வினை.49)

செயப்பாட்டு வினை வாக்கியத்தைச் செய்வினை வாக்கியமாக வழங்குவதும் மரபானதுதான். அதாவது பேச்சு மொழியில் இயல்பாகக் காணப்படுவதுதான். அதன்

கருத்தாடல் பொருள் அடிப்படையில் கேட்போர் விளங்கிக் கொள்வதைத் தொடரியல் நோக்கில் வாக்கிய மொழி மாற்று என்று விளக்கப்பட்டுள்ளது. இல்லம் மெழுகிற்று என்பது இல்லம் மெழுகப்பட்டது என்பது உரையாசிரியர்கள் விளக்கம் 'செயப்படு பொருளைச் செய்யப்பட்டது எனக் கூறாது கருத்தாவை கூறுமாறு போலத் தொழில்படச் சொல்லுதலும் வழக்கியல் மரபு' என்று தெய்வச்சிலையார் இலக்கண நோக்கில் விளக்கம் அளித்துள்ளார். அதாவது இல்லம் மெழிகிற்று என்று கூறும்போது இல்லம் எழுவாய். ஆனால் கருத்தா இல்லை. உண்மையில் ஒருவர் இல்லத்தை மெழுகினார் என்பதே கருத்தாடல் பொருள். அதை, செயப்பாட்டு வாக்கியமாக மொழிமாற்று செய்தால் இல்லம் ஒருவரால் மெழுகப்பட்டது என்று அமையும். ஆனால் கூடுதலாக செயப்பாட்டு வினை செய் வினையாக மாற்றப்பட்டுள்ளது. அதனால் 'ஒருவரால்' என்ற மூன்றாம் வேற்றுமைத் தொடரும் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது குறைந்த அளவு இரண்டு மொழி மாற்று நடைபெற்றுள்ளது.

i செயப்படுபொருளை செய்தது என்று மாற்றுவது. அதாவது பெயர்ச் சொல்லில் அமையும் மாற்றம்.

ii (செயப்படுபொருளை செய்து போலத்) தொழிற்பட மாற்றுவது என்பது வினைமுற்று மாற்றம்.

அந்த மொழி மாற்று வேறு பல வினைகளிலும் அமைந்துள்ளது. கூட்டம் நன்றாக நடந்தது என்றால் கூட்டம் நடத்தப்பட்டது என்றும், பேருந்து வேகமாக ஓடுகிறது என்றால் பேருந்து வேகமாக ஓட்டப்படுகிறது என்றும் பொருள் புரிந்துகொள்கிறோம்.

உரையாசிரியர்கள் கூடுதல் வகைகளை எடுத்துக் காட்டியுள்ளார்கள். கருவியைக் கருத்தாவாகக் கூறுதல் என்ற வகையைத் தெய்வச்சிலையார் குறிப்பிட்டு வாள்

வெட்டிற்று, சுரிகை குத்திற்று என்ற உதாரணங்களைக் கொடுத்துள்ளார். வாளால் வெட்டினார் என்பது வாள் என்பது கருவி என்பதால் கருவி கருத்தா போல் மொழி மாற்று செய்யப்பட்டுள்ளது.

அரசன் எடுத்த ஆலயம் என்பது அரசனால் எடுக்கப்பட்ட ஆலயம் என்ற பொருள்படுவதால் இங்கும் கருவி கருத்தாவாகவும் செயப்பாட்டு வினை செய்வினையாகவும் மொழிமாற்று செய்யப்பட்டுள்ளது.

எச்சவியல்

இங்கு 'மொழி புணர் இயல்பு' என்ற ஒரு வகையைத் தொல்காப்பியம்(8) குறிப்பிட்டு நாலு வகைப்படுத்தியுள்ளது. உண்மையில் மொழி மாற்று செய்யப்பட்ட முறைகளை ஒட்டி பெயரிடப்பட்டதும் பெரும்பான்மையும் உரியது என்பது சூத்திர வரிசையாலும் (செய்யுள் ஈட்டச் சொற்கள், செய்யுள் விகாரம் ஆகியவைகளை அடுத்தது), அதன் வகைகளை விளக்கும்போது செய்யுளுக்குரிய கலைச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளதாலும் (சுண்ணம், 'ஈரடி எண்சீர்' (10) அதன் ஒரு வகையாக 'அடிமறி'(11) குறிப்பிட்டுள்ளதாலும் அறியலாம். இங்கு மொழி மாற்று கருத்து புதைந்துள்ளது முக்கியமானது.

தொகைபற்றி 9 சூத்திரங்கள் (16-24) அமைந்துள்ளன. அவைகளில் வேற்றுமைத் தொகை, உவமத் தொகை, உம்மைத் தொகை ஆகியவை மொழி மாற்று அடிப்படையிலும், வினைத் தொகை, பண்புத் தொகை ஆகியவை சொல்வகைப்பாட்டு அடிப்படையிலும் அன் மொழித் தொகை என்பது பொருண்மை அடிப்படையிலும் அமைந்துள்ளன. அதன் அடிப்படைப் பண்பாக எல்லாச் சொல்லும் ஒரு சொல் நடைய என்று கூறியது (24) இரண்டு சொல்லான தொகையையும் தொடரையும் பிரித்து அறிய உதவுகிறது.

ஆனால் இந்தக் கருத்தை உட்கொள்ளாமல் சில தொடர்களையும் தொகையாக உதாரணம் கொடுத்துள்ளார்கள். வேற்றுமைத் தொகைக்கு நிலங்கடந்தான் (நிலத்தைக் கடந்தான்) என்பதையும் உதாரணமாகக் கொடுத்துள்ளார்கள். அது ஒரு தொடரே; தொகை அல்ல. அது ஒருமைச்சொல் நீர்மைத்து அல்ல, மேலும் நிலம் வேகமாகக் கடந்தான் என்றும் இன்னொரு சொல்லையும் இடையில் சேர்க்கமுடியும்.

தொடர் அமைப்பில் தலைச்சொல் அடைச்சொல் இருப்பது போலத் தொகைச் சொற்களிலும் இருப்பதை ஒரு சூத்திரம் (23) விளக்குகிறது. உரையாசிரியர்கள் இட அடிப்படையில் முன்னும் / பின்னும் என்று கொண்டுள்ளார்கள்.

முன்மொழி நிலையல் = மாம்பழம் பழம் தலைச் சொல் என்ற முறையில்

பின்மொழி நிலையல் = இடைமுலை, நடு வூர்

இருமொழி மேல் ஒருங்குடன் நிலையல் = உவாப் பதினான்கு (உம்மைத் தொகை)

மேடு பள்ளம்

அன்மொழி நிலையல் = வெள்ளாடை (வந்தாள்) வெள்ளை ஆடை உடுத்திய பெண் என்ற பொருள்

முடிவுரை

இலக்கணம் என்று தனிமொழி ஆய்வாகத் தோன்றியது, மொழிகளின் பண்பையும் அமைப்பையும் கோட்பாடு நோக்கில் ஆராயும் மொழியியல் என்ற ஆய்வாக மலர்ந்து, கோட்பாட்டு ஆய்வும், தனிமொழி இலக்கணம் ஆய்வு மொழியியல் ஆய்வுமாக வளர்ந்து வருகிறது. அதன் பயனாக சமூக மொழியியல், கிளைமொழியியல் போன்ற பல உள் துறைகள் தோன்றியுள்ளதோடு கணினி மொழியியல்,

இலக்கிய மொழியியல் முதலிய உள் துறைகளும் மலர்ந்துள்ளன. மொழியியல் ஒரு வளரும் ஆய்வுத் துறை. அதனால் பண்டை இலக்கணங்களும் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அந்தச் சமூகத்தின் மொழித் தொல்லியல் கண்டறியப்படுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, மொழியை மனிதரின் கருவியாக மையப்படுத்திப் பார்க்காமல் மொழியைக் கருவியாகக் கொண்டு மனிதரை, மனித மூளையின் ஆற்றலை மையப்படுத்துகிற பார்வை இன்று வற்புறுத்தப்படுகிறது.

தொடரியல் நோக்கில் சில கவிதைகள்

குறள்

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை / ஆரிருள் உய்த்து விடும்(121) இயல்பான பதவுரை. ஆற்றொழுக்கு செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் / செயற்கரிய செய்கலா தார் (26) இயல்பானதும் மொழிமாற்றும். முன்னது இயல்பானது, பின்னது மொழி மாற்று பெற்றுள்ளது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின் / நிற்க அதற்குத் தக (391) பதவுரை = கற்பவைக் கசடறக் கற்க கற்றபின் அதற்குத் தக நிற்க. மொழி மாற்று. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணிய ராகப் பெறின் (666).) பதவுரை = எண்ணியார் திண்ணியராகப் பெறின் எண்ணிய எண்ணியாங்கு எய்துப தொடர் மொழி மாற்று.

பொருள் இடைவெளி

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் / இறைவனடி சேரா தார் (10) பதவுரை = (இறைவனடி சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்தார்.

என்ஐ முன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ / முன்னின்று கல்நின் றவர் 771. படைச் செருக்கு அதிகாரம். பதவுரை = தெவ்விர் என்னை முன் நில்லன்மின் (என்னை / முன்னின்று கல்நின்றவர். பகைவர்களே (போர்க்களத்தில்) என்னுடைய தலைவன் என் முன் நிற்காதீர்கள். போர்க்களத்தில் என் தலைவன் முன்னால் நின்று கல்லாகப் போனார்கள். (மந்திரம் அல்ல) வீர மரணத்தால் நடுகல் வைத்துக் கல்லாக இருக்கிறார்கள்.

புறநானூறு

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்எங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே (112)

2கருத்தான், ஒவ்வொன்றும் 2 வாக்கியம். தொடர் அமைப்பு மாறுபாடு.

பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிது விறமன்மாண் குடுமி
இன்னாவாகப் பிறர்மண் கொண்டு
இனிய செய்தி ஆர்வலர் முகத்தே (12)

ஒரு கலவை வாக்கியம் + 1 எளிய வாக்கியம் மொழி மாற்று

அடிக்குறிப்பு

1. தமிழிலும் கொற்றன் ஒரு வீரன் என்ற வாக்கியத்தைத் தொடராக்கும்போது கொற்றன் என்று கூறுவதால் தமிழில் புதைநிலையில் (வீரன்) ஆவான் என்ற வினை அமைந்து புறநிலையில் கெட்டுவிட்டதாக மாற்றிலக்கண மொழியியலார் விளக்குவர்.

உந்தும் உத்தும்

பேராசிரியர் இரா.கோதண்டராமன்,
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு,
அசோக்நகர்,
புதுச்சேரி - 605 008.
கைபேசி - 94431 - 51044

1.0 *செயுந்த்உ வாய்பாட்டுத் தொல் திராவிட வினைகள்

1.1 செயுந்து வாய்பாட்டினவாகிய *உந்தீற்று* இறவாக்காலப் பொது வினைமுற்றுக்களும் செயுத்து வாய்பாட்டினவாகிய *உத்தீற்று* இறவாக்காலப் பகுதிகளும் பழந்தமிழில் காணப்படுகின்றன. *'உம் உந்தாகும் இடனுமார் உண்டே'* (தொல்.சொல்.சேனா.292) என்ற நூற்பாவின் மூலம் தொல்காப்பியர் செயுந்து வாய்பாட்டு வினைகளை அறிமுகப்படுத்துகிறார். செயுந்து வினைகள் செயும் + து என்று ஆராயத்தக்கனவாகும். அதனால்தான், தொல்காப்பியர் *உம் உந்தாகும்* எனக் குறிப்பிடுகிறார். மீனாட்சிசுந்தரன் செயுந்து வாய்பாட்டு வினைகள் *செயுந்* என்ற வினைகளின் அடியாகத் தோன்றியவை என்று கருதுகின்றார்(1965:28). பழந்தமிழில் செய்தும் வாய்பாட்டுத் தன்மைப் பன்மை இறவாக்கால வினைகளில் *உம்* விகுதி பன்மையைக் குறிப்பதாகும். தன்மை ஒருமை விகுதியைப் பொறுத்தவரை தொல்காப்பியர் செய்கு வாய்பாட்டு வினைகளில் நிகழும் உகர விகுதியை முன்னிலை ஒருமை விகுதியாகக் கருதுவார் (சொல்.சேனா.203). இந்த உகர விகுதி *உன்* என மீட்டுருவாக்கம் செய்யத்தக்கது என்ற மீனாட்சிசுந்தரனின் கருத்து ஏற்புடையதே. இதனைக் கருத்தில் கொண்டு னகரத்தை ஒருமை விகுதியாகவும் மகரத்தைப் பன்மை

விகுதியாகவும் மீனாட்சி சுந்தரன் கருதுவார்(1965:28). இதன் அடிப்படையில் செயுந்து வாய்பாட்டு வினைகளில் நிகழும் செயுந் என்ற பகுதியில் நிகழும் நகரக் கிளவியை ஒருமை விகுதியாக அவர் கருதுகிறார். இதனை வலியுறுத்தும் வகையில் தொல்திராவிடத்தில் னகர நகரங்கள் ஒரே ஒலியனாக நிகழ்ந்தன என்று மீனாட்சிசுந்தரன் குறிப்பிடுகிறார் (1965:29). அவருடைய இந்தக் கருதுகோள் ஏற்புடையதாகக் கொள்ள முடியாது. ஏனெனில், தொல்காப்பியரே உம் என்பதுதான் உந்தாக நிகழும் என்று குறிப்பிடுவதால், செயுந்து வாய்பாட்டு வினைகளில் நிகழும் நகரக் கிளவியை மகரத்தின் திரிபாகவே கொள்ள வேண்டும்.

1.2 செயுந்து வாய்ப்பாட்டு வினைகள் புறநானூற்றில் மட்டுமே பதிவாகியுள்ளன. இவை வல்வினை - மெல்வினை ஆகிய இரண்டு பிரிவுகளிலும் நிகழ்கின்றன. இவற்றில் வல்வினையும் மெல்வினையும் வினைப்பகுதியைக் கொண்டே அறியப்படும். எ-டு. *கறக்குந்து* (புறம்.352.2), *பறிக்குந்து* (புறம்.339.3, 352.4), *பூக்குந்து* (புறம்.137.8 396.2). இவற்றில் *கறக்கு, பறிக்கு, பூக்கு* ஆகியவை வல்வினைப்பகுதிகளாகிய *கற, பறி, பூ* ஆகியவற்றின் சார்ந்துருபுகளாகும். *ஆருந்து* (புறம்.395.8), *இரியுந்து* (புறம்.396.6) இவற்றில் *ஆர், இரி* ஆகியவை மெல்வினைப்பகுதிகளாகும். மலையாளத்தில் காணப்படும் செயுந்து வாய்பாட்டு நிகழ்கால வினைமுற்றுக்கள் செய்கின்று வாய்பாட்டு வினைமுற்றுகளின் திரிபல்ல. அவை செயுந்து வாய்பாட்டு வினைகளின் திரிபாகும். செயுந்த் வாய்பாட்டு வினைகள் *செயுந்த்உ வாய்பாட்டு வினைகளின் ஒருவகைத் திரிபாகும். *செயுத்து* வாய்பாட்டு வினைகளும் பிறிதொரு வகைத் திரிபாகும். இவைபற்றி இந்த எழுத்துரையில் விரிவாக ஆராயப்படுகிறது.

1.3 செயுந்து வாய்பாட்டு வினைகளுக்கு இணையாகப் பழந்தமிழில் செயுத்து (<*செயுந்த்உ) வாய்பாட்டு இறவாக்காலப் பகுதிகளின் நிகழ்ச்சியும் காணப்படுகிறது. செயுந்து வினைகளும் செயுத்து வினைகளும் *செயுந்த்உ வாய்பாட்டினவாக மீட்டுருவாக்கத் தக்கனவாகும். தொடக்கத்தில் செயுத்து வாய்பாட்டு வினைகள் இறவாக்காலப் பொதுவினைமுற்றுக்களாக நிகழ்ந்து பின்னர் இயைபு விகுதிகளை ஏற்றுச் சிறப்பு வினைமுற்றுக்களாக மாறியனவாதல் வேண்டும். கன்னடத்தில் இந்த வாய்பாட்டு வினைகளைக் காணலாம். எ-டு. *கேளுத்தானெ* 'கேட்கிறான்' *கேளுத்தாளெ* 'கேட்கிறாள்', *கேளுத்தாரெ* 'கேட்கிறார்'. செயுத்து வாய்பாட்டு வினைகள் மட்டுமே இன்றுவரை தமிழில் இறவாக்கால வினைப்பெயர்களாக வழங்கி வருகின்றன. இந்த வினைகளும் செய் + தல் எனப் பிறழ் பிரிக்கப்பட்டு உள்ளன. உண்மையில் செய்தல் வாய்பாட்டு வினைகள் செய்து + அல் என்ற அமைப்பினவாகும். இந்த அமைப்பில் அல் என்பதன் முன் நிகழும் செய்து வாய்பாட்டு வினைகள் செயுத்து (<*செயுந்த்உ) வாய்பாட்டு இறவாக்கால வினைகளின் ஒடுக்கமாகும். செய்து வாய்பாட்டு வினைகள் தமிழில் இறந்தகால வினைகளாகவும் நிகழ்வதால் செய்தல் வாய்பாட்டு வினைகள் செய்+தல் என்று பிறழ் பிரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டதுபோலும். ஏனைய வினைகள் இக்காலத் தமிழில் வழக்கிழந்துவிட்டன.

2.0 செயுந்து வினைகள்

2.1 புறநானூற்றில் மட்டுமே காணப்படும் செயுந்து வாய்பாட்டு வினைகள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

வல்வினை

1 (1) உரைக்குந்து (384.7)

(2) ஒலிக்குந்து (137.6)

(3) நிலைக்குந்து (386.15,17)

(4) கறக்குந்து (352.2)

(5) பறிக்குந்து (339.3, 352.4)

(6) பூக்குந்து (137.8, 396.2)

(7) பெயர்க்குந்து (395.11)

(8) மறுக்குந்து (343.2)

மெல்வினை

2 (1) ஆருந்து (380.6)

(2) இரியுந்து (396.6)

(3) இரீஇயுந்து (395.11) (<*இரிகுந்து)

(4) உகளுந்து (339.5)

(5) குறூஉந்து (339.8)(<*குறுகுந்து)

(6) தரூஉந்து (24.9) (<*தருகுந்து)

(7) தூங்குந்து (24.6,400.14)

(8) வழங்குந்து (396.1)

(9) வைகுந்து (384.9)

2.2 செயுந்து வாய்பாட்டுப் பொதுவினைகள் சிறப்பு வினைகளாகச் செயற்படத் தொடங்கிய நிலையில் அவற்றில் நிகழும் ஈற்றுத் துகரக் கிளவி ஒன்றன்பால் விகுதியாக இனங்காணப்பட்டது. இதன் விளைவாகச் செயுந்து வினைகள் *செய்-உந்+து* என்ற அமைப்பினவாகக் கொள்ளப்பட்டு அவற்றில் நிகழும் *-உந்-* என்பது இறவாக்கால விகுதியாக இனங்காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து செயுந் வாய்பாட்டு இறவாக்காலப் பகுதிகள் பிற

இயைபு விகுதிகளையும் ஏற்கத் தொடங்கின. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுகள் தெளிவுபடுத்தும்.

3 (1) அறியுந்+அம் > அறியுநம் (அகம்.243.12,புறம்.381.6) 'அறிவோம்'

(2) அறியுந்+அன் > அறியுநன் (புறம்.136.15) 'அறிவான்'

(3) அறியுந்+அள் > அறியுநள் (நற்.44.5) 'அறிவாள்'

(4) அறியுந்+அர் > அறியுநர் (குறி.4.நற்.42.7, பதி.26.4) 'அறிவார்'

(5) அறையுந்+அர் > அறையுநர் (கலி. 30.16) 'அறைவார்'

(6) களையுந்+அர் > களையுநர் (அகம்.179.9) 'களைவார்'

2.3 செயுந (<செயுந்+அ) வாய்பாட்டு வினைகள் முற்றெச்சமாகவும் வினையாலணையும் பெயராகவும் நிகழும் நிலையும் பழந்தமிழில் காணப்படுகின்றது.

கருதுக

4 'அடுக்குந வரினும்' (தொல்.சொல்.சேனா.429) 'அடுக்கி வரினும்'

5 (1) கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும் (=திரிவனவும்)

வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்

(தொல்.எழுத்து.இளம்.483)

தொடரும் ....

காப்பிய உவமைகள் : ஹோமர், மில்டன், சங்கச்சான்றோர்

பேராசிரியர் ப. மருதநாயகம்,
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல் தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை – 600 113.

சென்ற இதழின் தொடர்ச்சி .. ..

③

ஹோமரைப் பின்பற்றி அவரது காப்பியங்களை நன்கு பயின்ற ஆங்கிலக் கவிஞர் மில்டன் தனது **விண்ணுலக இழப்பு** (Paradise lost) என்னும் பேரிலக்கியப்படைப்பில் பல நீண்ட உவமைகளைக் கையாளுகிறார். அவை பல வகைப்பட்டவை; சிக்கலும் நுட்பமும் நிறைந்தவை. சேக்ஸ்பியருடைய உவமையையும் மில்டனுடைய உவமையையும் ஒப்பிடும் திறனாய்வாளர்கள் முன்னதில் பொருளும் உவமையும் சில கூறுகளில் ஒத்திருப்பதையும் அக்கூறுகள் தெளிவாக்கப்படுவதையும் பின்னதில் பொருளுக்கும் உவமைக்கும் மிகச் சிறிதளவே ஒற்றுமை இருப்பதையும் எடுத்துரைப்பர். சேக்ஸ்பியருடைய நாடகமொன்றில் எகிப்து நாட்டின் அரசியான கிளியோபாட்ரா பாம்பால் கடிக்கப்பட்டுத் தற்கொலை செய்து கொள்ளமுயலும்போது, "உடலைக் காதலன் கிள்ளும்போது வலியேற்படினும் அது விரும்பப்படுவதுபோல, மரணம் விரும்பப்படும் வேதனையாகும்" என்பாள். மில்டனின் உவமைகளில் பெரும் பொருத்தத்தைக் காணமுடியாதென்றாலும் அவை நான்கு வகையான பணிகளைச் செய்கின்றன என்று சுட்டிக் காட்டி விளக்குவாரும் உண்டு. இந்நான்கை illustration, ornamentation, aggrandizement, prolepsis என்று அடையாளப்படுத்துவர். புலனல்லாதனவற்றைப்

புலனாக்குவது, அழகிய பொருளாகிக் கேட்டார்க்கு இன்பம் பயப்பது ஆகிய இரண்டோடல்லாமல் உவமிக்கப்படும் பொருளை உள்ளதைக் காட்டிலும் உயர்வாக அல்லது தாழ்வாகக் காட்டுவதை aggrandizement என்பர். எதிர்வரும் நிகழ்வை முன்கூட்டியே குறிப்பால் உணர்த்துவது 'proleplsis' ஆகும்.

விண்ணுலகத்துப் பேய்கள் (devils) அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டு நரகில் தள்ளப்பெறும்போது புயலால் சிதறியடிக்கப்படும் இலைகளோடு ஒப்பிடப்படுகின்றன.

சாத்தான் எழுந்து நின்று அவனது படையாகிய, வீழ்ச்சியுற்ற தேவதூதர்களை அழைத்தான். அவர்கள் வலம்புரோசாவின் ஆறுகளில் இலையுதிர் காலத்தில் விழுந்து கிடந்த இலைகளைப் போல் ஒருவரோடு ஒருவர் நெருங்கி விழுந்து கிடந்தனர்;

வேட்டைக்கார அரக்கானாகிய ஓரியன் கடும்புயல் காற்றைப் படைக்கலமாகக் கொண்டு செங்கடல் கரையைத் தாக்கியபோது வீசியெறியப்பட்ட கடல் செடிகளை ஒத்துச் சிதறிக்கிடந்தனர்; செங்கடலின் அலைகள் பூசிரசையும் அவனது படையினரையும் தூக்கியெறிந்தபோது கடலில் பரவிக் கிடந்து மிதந்த பிணங்களையும், உடைந்த தேர்ச்சக்கரங்களையும் போன்று அப்பேய்கள் வெள்ளத்தில் மிதந்தன.(I 300-313)

இவ்வுவமைகள் விண்ணுலகிலிருந்து அடித்து விரட்டப்பட்ட தேவதூதர்கள் அடைந்த நகைப்புக்குரிய இழி நிலையைப் புலப்படுத்துகின்றன.

நெருப்புக்குழம்பான ஏரியில் கட்டுண்டு கிடந்த சாத்தான் ஒரு பெரிய கடல்விலங்கோடு ஒப்பிடப்படுகின்றான்.

கடலில் நீந்தி வாழும் விலங்குகளிலெல்லாம்
மிகப்பெரியதாக இறைவனால் படைக்கப்பட்டது
லெவியதான் (leviathan) ஆகும்.
கடல் இரவால் சூழப்பட்டு விடியல் தோன்றாத
போது, வழி தவறிய சிறு கப்பலின் மாலுமி
ஒருவன் அப்பெரு விலங்கைச் சிறு தீவு என்று
தவறாகக் கருதி அதில் இரவைக் கழிக்கலாமென்று
அதனை நெருங்கினான்.

இவ்வொப்புமையானது திமிங்கிலத்தைத் தீவென்று மாலுமி தவறாக எண்ணியதைப் போல் பின்னால் ஏவாள் சாத்தானைத் தனக்கு நன்மை செய்வானென்று எண்ணி அவனிடம் நட்புக் கொண்டமையை முன் கூட்டித் தெரிவிக்கும் என்று திறனாய்வாளர் விளக்குவர்.

மில்டனால் சொல்லப்படும் உவமை பற்றிய நீண்ட செய்தி எப்போதும் வருவது உறைக்கும் என்றோ, ஒப்புமையை விளக்கும் என்றோ நம்பவேண்டியதில்லை. டி.எஸ்.எலியட் கூறுவதைப் போன்று, ஒற்றுமையைச் சுட்டாத விளக்கமெல்லாம் வாசகனுக்கு மகிழ்ச்சி அளிப்பதில் தவறுவதில்லை. சாத்தானின் கேடயமானது கலிலியோவால் அவரது தொலைநோக்கும் கருவி (telescope) யால் பார்க்கப்பட்ட நிலவை ஒத்திருந்தது என்பார் மில்டன்.

அவனது கேடயம் கனமானது, அளவில் பெரியது, வட்ட வடிவமானது; அவனது முதுகில் தொங்கியது. அது டஸ்கன் கலைஞனான கலிலியோ; ∴.பெசோல் குன்றின் உச்சியிலிருந்தோ, வல்டார்னோவிலிருந்தோ புதிய இடங்களையும், ஆறுகளையும் அல்லது மலைகளையும்

பார்ப்பதற்காக நிலவை நோக்கி நிறுவிய தொலைநோக்கும் கருவியைப் போன்றிருந்தது(I 248 - 291)

இத்தாலியில் வாழ்ந்த அறிவியல் மேதையான கலிலியோவின் பால் அன்பு கொண்ட மில்டன் முன்னவர் இல்லச் சிறையில் இருந்தபோது அவரைத் தமது ஐரோப்பியப் பயணத்தின்போது பார்த்தார் என்பது வரலாற்றுச் செய்தி. எனவே சாத்தானின் கேடயத்தைத் திங்களுக்கு ஒப்பிடப்படும்போது மில்டனால் தொலைநோக்குக் கருவியும் சேர்த்தே குறிப்பிடப்படுகிறது.

ஆதாமும் ஏவாளும் இடையை மறைத்துக் கொள்ளப் பயன்படுத்திய இலைகள் எத்தகையவை என்னும் போது தென்னிந்திய ஆலமரத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார் மில்டன்.

> அந்த அத்தி மரம் (fig tree), பழத்திற்காகப் புகழப்படும் மரவகையைச் சார்ந்ததன்று; ஆனால் இக்காலத்தில் மலபாரிலோ, தெக்கணத்திலோ இந்தியர்கள் காணும் மரத்தை ஒத்தது. அதன் கிளைகள் மிக நீண்டு அகன்று இருப்பதால் வளைந்து மண்ணில் வேரூன்றி நிற்கும். தாய்மரத்தினைச்சுற்றி அதன் மகள்களாகிய விழுதுகள் வளரும். தூண்கள் நிறைந்த பந்தல் போன்று அமைந்து அவை நிழல் தரும். அவற்றினிடையே நடந்து செல்லும் அளவிற்கு அகன்ற இடைவெளிகளும் உண்டு. அங்கே பலநேரங்களில் வெயிலுக்கு அஞ்சும் இடையர்கள் அம்மர நிழலில் ஒதுங்குவர்; அவர்களுடைய

மாடுகளும் கன்றுகளும் புல்மேய்வதைக் கண்காணிப்பர்.

(IX 1101 – 1110)

இந்நீண்ட உவமையில் தமிழகத்து ஆலமரத்தின் சித்திரிப்பு,

தெள்ளிய ஆலின் சிறுபழத்தொரு விதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும் மே

என்னும் பாடலை நமக்கு நினைவூட்டும்.

சில உவமைகளில் பொருளுக்கும் உவமைக்கும் உள்ள ஒற்றுமையோடு வேற்றுமையும் சுட்டப்படும். ஓரிடத்தில் சாத்தான் விண்ணுலகின் நுழைவாயிலைக் காணும்போது ஜேகப் என்பாரோடு ஒப்பிடப்படுகிறான்.

சாத்தான் கண்ட படிக்கட்டுகள் ஜேகப் கண்ட
படிக்கட்டுகளை ஒத்திருந்தன. அப்படிக்கட்டுகளில்
தேவதூதர்கள் ஒளிவீசுபவர்களாய்க் கூட்டம்
கூட்டமாக
ஏறிக்கொண்டும் இறங்கிக் கொண்டுமிருந்தார்கள்.
திறந்த வெளியில் இரவில் படுத்திருந்து கனவு கண்டு
விழித்தபோது
'இதுவே விண்ணுலகின் கதவெ'ன்று கத்தினான்.

(III 510 - 515) .. ..

இருவரும் விண்ணுலக வாயிலை நோக்கிச் செல்லும் படிக்கட்டுகளைக் கண்டது ஒற்றுமை. சாத்தான் அவனது

வாழ்க்கையின் ஒரு திருப்பு முனைச் சூழலில் பிரபஞ்சக் காட்சியைக் காண்கிறான்; அவனது உள்ளம் மேலும் இறுகிக் கல்லாகிறது. ஆனால் ஜேகப் அச்சமுற்று மனம் திருந்தி ஓர் உறுதியான முடிவிற்கு வருகிறான். இது இருவருக்குமுள்ள வேற்றுமை.

பொருளும் உவமையும் வரும் சில பகுதிகளில் உவமை முழு விளக்கம் பெறுவதில்லை; ஓரிரு கூறுகளே சுட்டப்படும். ஈடன் தோட்டம் பழந்தொன்மங்களில் பேசப்படும் மூன்று தோட்டங்களோடு சுருங்கிய அளவில் ஒப்பிடப்படுகிறது.

> அந்த ஈடன் தோட்டத்து இடமானது,
> கற்பனையான அதோனிஸ் தோட்டத்தையும்,
> புகழ்பெற்ற அல்சி நூசையும், அல்லது
> தனது அழகிய எகிப்திய மனைவியோடு
> காமக்களியாட்டம் நிகழ்த்திய மன்னனின்
> தோட்டத்தையும் விஞ்சிய சிறப்புடையதாய்க்
> காட்சியளித்தது. (IX 439 - 443) (..........)

சில ஒப்புமைப் பகுதிகளில் உவமையின் இரண்டு மூன்று கூறுகள் நம் நினைவிற்குக் கொண்டு வரப்படலாம்.

ஏவாளைத் தன் பேச்சாற்றலால் ஏமாற்றமுனையும் சாத்தான், தான் மனித இனத்தின் பால் அன்பும் அக்கறையும் கொண்டவனைப் போல் வாதிடுகின்றான். எனவே மில்டன் அவனைப் பழம் கிரேக்க, ரோமானியச் சொற்கலை வல்லவரோடு ஒப்பிடுகின்றார்.

ஏதென்சு நகரிலோ, விடுதலையில் களித்த ரோமாபுரியிலோ, பேச்சுக்கலை சிறப்புற்றிருந்த பண்டைக் காலத்தில் சொற்பொழிவாளன் ஒருவன் மக்களின் நன்மைகருதிய பொருள் ஒன்று பற்றிப் பேசத் தொடங்குமுன் தனது ஒவ்வொரு செயலும், அங்க அசைவும் கேட்க வந்திருப்போரைக் கவரும் வண்ணம் நடந்து கொள்வான். சில பேச்சுகள், அவன் மக்கள் மேல் கொண்டிருந்த ஆர்வத்தைக் காட்டுதல் வேண்டி முன்னுரையின்றி

உச்சத்தில் தொடங்கும். அன்னாரைப் போன்றே சாத்தான் நின்று, நிதானித்து, நடைபயின்று, உச்சத்திற்குச் சென்று, உணர்ச்சி வயப்பட்டவனாகத்தன் உரையைத் தொடங்கினான்.

(IX 670 - 678)

இரண்டு பொருள்களுக்கு இணைத்துச் சொல்லப் பெறும் உவமைகளும் உண்டு. ஆதாமும் ஏவாளும் சாத்தானால் ஏமாற்றப்பட்ட பிறகு, பாவமும் மரணமும் நரகத்திலிருந்து சாத்தானோடு மனிதவுலகத்திற்குச் செல்லுகின்றன.

அவர்கள் மூவரும் சீறும் கடலலைகளால் தாக்குறுவதைப் போல் பல பக்கங்களிலிருந்தும் மொத்துண்டு மேற் சென்றனர். அத்தாக்குதல், துருவத்திலிருந்து வீசும் இரு பெரும் புயற்காற்றுகள் பனிமலைகளை உருட்டித் தள்ளுவதையொத்த ஆற்றலைக் கொண்டிருந்தது.(X-285-293)

தொடரும் ....

சங்கச் செய்திகள்

09.08.2019 அன்று தமிழ் வளர்ச்சித்துறை நடத்திய கவிதைப்போட்டியில் நமது கல்லூரியின் முதுகலை இரண்டாமாண்டு மாணவி த.கார்த்திகா பங்கு கொண்டு முதற்பரிசு ரூ.10,000 ரொக்கமாக வென்றுள்ளார்.

13.08.2019 அன்று செந்தமிழ்க் கல்லூரி வேலைவாய்ப்பு மையமும், லைப் ஸ்கில் அகாடமி & கன்சல்டன்சியும் இணைந்து கற்றல், தெரிதல், வளர்தல் என்ற தலைப்பிலான ஒருநாள் பயிலரங்கம் நடைபெற்றது. இதில் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு – அறிமுகம் என்ற தலைப்பில் திரு.மு.விக்னேஷ்வர், பயிற்றுநர் லேர்ன் ஙோ க்ரோ அவர்கள் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர்(பொ.) கி.வேணுகா அவர்கள் அனைவரையும் வரவேற்றார். உதவிப்பேராசிரியர் முனைவர் பெ.இந்துராணி நன்றி கூறினார். திரளான மாணவ, மாணவியர் கலந்துகொண்டனர்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியில் 14.08.2019 அன்று புதிய தேசிய கல்விக் கொள்கை – தமிழ் மொழியின் நிலை குறித்த சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது.

முதல் அமர்வில் தமிழ்ச்சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை தாங்கினார். தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர்கள் பேராசிரியர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி, பேராசிரியர் முனைவர் ம.திருமலை, பேராசிரியர் முனைவர் ம.ராஜேந்திரன் ஆகியோரும் உலகத் தமிழ்ச்சங்கத்தின் மேனாள் இயக்குநர் முனைவர் பெ.சந்திரா ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள். மூன்று வயதில் கல்வி என்பது உளவியல் ரீதியாக பாதிக்கக்கூடியது. கல்விக் கொள்கை வகுத்தவர்களில் தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. கல்லூரிகளே பட்டம் வழங்கலாம் என்பது சிக்கலை உருவாக்கும்; மூன்றுக்கும்

மேற்பட்ட மொழிகள் கற்கலாம் என்பது இருமொழிக் கொள்கைகளுக்கு எதிரானது போன்ற கருத்துகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா அனைவரையும் வரவேற்றார். முனைவர் பூ.பூங்கோதை நன்றி கூறினார்.

பிற்பகலில் நடைபெற்ற இரண்டாவது அமர்வில் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் கி.கருணாகரன், மதுரை தியாகராசர் கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் மு.அருணகிரி, சென்னை மாநிலக்கல்லூரியின் இயற்பியல்துறை மேனாள் துறைத்தலைவர் பேரா.அ.மார்க்சு ஆகியோர் கருத்துரை வழங்கினர். முன்னதாக கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அனைவரையும் வரவேற்றார். முனைவர் ஜெ.போ.சாந்திதேவி நன்றி கூறினார். முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் ஜெ.கோகிலா ஆகியோர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்கள்.

நிகழ்ச்சிக்கு தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரி ஆட்சிக்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தமிழறிஞர்கள், மேனாள், இந்நாள் பேராசிரியர்கள், மேனாள், இந்நாள் மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

17.08.2019 அன்று முரசொலி அறக்கட்டளையின் சார்பில் நடைபெற்ற பாரதிதாசன் பாட்டு ஒப்புவித்தல் போட்டியில் நமது கல்லூரியின் இளங்கலை இரண்டாமாண்டு மாணவி மு.கோமதி பங்கு கொண்டு மூன்றாம் பரிசு ரூ.2000 ரொக்கமாக வென்றார். மேலும் முதுகலை இரண்டாமாண்டு மாணவி த.கார்த்திகா, பெ.தெய்வம், மு.கோமதி, இரா.பிரியங்கா, பெ.தெய்வம் ஆகியோர் ஊக்கப்பரிசாக தலா ரூ.1500 வென்றனர்.

அக்டோபர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



ம.பொ.சி.
(அக்.3)

செல்வகேசவராய முதலியார்
(அக்.3)

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்
(அக்.8)

மு.வரதராசனார்
(அக்.10)

வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார்
(அக்.12)

சுந்தரராமசாமி
(அக்.15)

கண்ணதாசன்
(அக்.17)

மு.கதிரேசன் செட்டியார்
(அக்.24)

பதிப்பாசிரியர்: **பேராசிரியர். இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**
முனைவர் திரு முருகரத்தினம்

முனைவர் திரு. **இராம.சுந்தரம்**	முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**	முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**	முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**	முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**	முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

தமிழ்ச்சங்க மாதிரித் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும், கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாக தமிழ்ப்பாடம் மாதிரித் தேர்வு சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டு முதல் மாநில பாடத்திட்டத்தில் கூடுதலாக பதினொன்றாம் வகுப்பிற்கும், மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கும் மாதிரித் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணாக்கர்களுக்கு சங்கத்தால், சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணாக்கர்களுக்கு எதிர்காலத்தில் பெரும் பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான சங்கத் தேர்வுகள் மாநில மற்றும் மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கு 11.01.2020-ஆம் நாளன்றும், பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு 10.01.2020-ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணாக்கர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452. - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1